# வலயக்கல்வி அலுவலகம் - துணுக்காய்
# முதலாம் தவணைப் பரீட்சை – 2020

**பாடம்:- சைவநெறி**

சுட்டெண்:....................... **தரம் – 11** **நேரம் : 03 மணி**

## பகுதி - I

**1- 40 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள சரியான மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. நற்குஞ்சர கன்று நண்ணிற் கலைஞானம் ....... என்பதில் நற்குஞ்சரம் என போற்றப்படுபவர்
    1. சிவபெருமான் 2. முருகன் 3. பிள்ளையார் 4. விஷ்ணு

2. உடலாலும் உள்ளத்தாலும் இருவரும் ஒருவர் என்ற தத்துவத்தை உணர்த்துவது
    1. இரட்சா பந்தனம் 2. மாலைமாற்றுதல்
    3. பாணிக்கிரகணம் 4. கணையாழி எடுத்தல்

3. திருவாசகம், திருக்கோவையார் என்பன உள்ளடங்கும் திருமுறை
    1. 10ம் திருமுறை 2. 8ம் திருமுறை 3. 12ம் திருமுறை 4. 9ம் திருமுறை

4. சரபோஜி மன்னருக்கு அமாவாசைத் திதியை பௌர்ணமி திதியாக காண்பிக்கும் பொருட்டுப் பாடியது
    1. சகலகலா வல்லி மாலை 2. கந்தலரங்காரம்
    3. அபிராமி அந்தாதி 4. பராபரக்கன்னி

5. “கற்றவர் விழுங்கும் கற்பக கனி” என இறைவனை போற்றியவர்
    1. சேந்தனார் 2. திருமூலர் 3. மாணிக்கவாசகர் 4. அப்பர்

6. “ யாவர்க்குமாம் உண்ணும் போதொருகைப்பிடி” என்பதனுடாக வலியுறுத்தப்படுவது
    1. ஒப்பரவு 2. ஜீவகாருண்யம் 3. வாய்மை 4. ஈகை

7. ஐப்பசி மாத வளர்பிறை பிரதமை தொடக்கம் சஷ்டி வரையுள்ள ஆறு தினங்கள் அனுட்டிக்கப்படும் விரதம்
    1. விநாயகர் சஷ்டி 2. வரலட்சுமி விரதம்
    3. மார்கழித் திருவாதிரை 4. கந்தசஷ்டி

8. தீபாவளி பண்டிகையுடன் தொடர்புடைய அசுரன்
    1. சூரன் 2. நரகாசூரன் 3. கஜமுகன் 4. சிங்கமுன்

9. “வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்” எனக் கூறுவது
    1. திருவாசகம் 2. திருப்பல்லாண்டு 3. திருமந்திரம் 4.திருதொண்டர் புராணம்

10. உண்மைப்பொருள் ஒன்றே அறிவாளர் அதனைப்பல பெயர்களால் வழங்குபவர் எனக் கூறும் வேதம்
    1. இருக்கு வேதம் 2. யசூர் வேதம் 3. சாமவேதம் 4. அதர்வன வேதம்

11. பெரிய புராணத்தின் ஆசிரியர்.
   1. திருமூலர்   2. சேக்கிழார்   3. கச்சியப்பசிவாச்சாரியர்   4. கபிலதேவர்

12. சிவ மூர்த்தங்களின் எண்ணிக்கை
   1. 62   2. 50   3. 64   4. 40

13. அருளல் தொழிலைக் குறிக்கும் திருவிழா
   1. தேர்த்திருவிழா   2. கொடியேற்றம்   3. மௌனோற்சவம்   4. தீர்த்தம்

14. சைவசமயத்தின் முதற் குரவர்
   1. திருநாவுக்கரசர்   2. சுந்தரர்   3. திருஞானசம்பந்தர்   4. மாணிக்கவாசகர்

15. சகலாகம பண்டிதர் எனும் சிறப்புப் பெயர் பெற்றவர்
   1. மெய்கண்டர்   2. அருணந்தி சிவாசாரியார்
   3. மறைஞானசம்பந்தர்   4. உமாவதி சிவாசாரியார்

16. தமிழாகமம் எனச் சிறப்பிக்கப்படும் நூல்
   1. திருமந்திரம்   2. தேவாரம்   3. திருவாசகம்   4. திருப்பல்லாண்டு

17. மயில்வாகனன் எனும் பிள்ளை நாமம் உடைய ஈழத்துச் சான்றோன்
   1. விபுலாநந்தர்   2. விவேகானந்தர்   3. ஆறுமுக நாவலர்   4. அருணாசல தேசிகர்

18. சதசத்து என அழைக்கப்படுவது
   1. பதி   2. பாசம்   3. ஆன்மா   4. மாயை

19. குரு வழிபாட்டால் முத்தி அடைந்தவர்
   1. இயற்பகையார்   2. திருமூலர்   3. பூசலார்   4. கலிக்காமர்

20. சேத்திர பாலகர் என அழைக்கப்படும் நாட்டார் தெய்வம்
   1. ஐயனார்   2. வைரவர்   3. நாகதம்பிரான்   4. முனியப்பர்

21. ஈழத்தை சிவபூமி என அழைத்தவர்
   1. ஆறுமுக நாவலர்   2. திருநாவுக்கரசர்   3. திருமூலர்   4. ஞானப்பிரகாசர்

22. இலங்கையில் மிக உயரமான கொடித்தம்பம் காணப்படும் ஆலயம்
   1. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்   2. நல்லூர் கந்தசுவாமி கோயில்
   3. இணுவில் கந்தசுவாமி கோயில்   4. மாமாங்கப்பிள்ளையார் ஆலயம்

23. பிள்ளையார் கதை எனும் நூலின் ஆசிரியர்
   1. விபுலானந்தர்   2. அருணாட்சல தேசிகர்   3. வரதபண்டிதர்   4. ஞானப்பிரகாசர்

24. சைவ வித்தியா விருத்திச்சங்கம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
   1. 1888   2. 1921   3. 1923   4. 1848

25. “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்” எனப் போற்றுவது
   1. மணிமேகலை   2. அகநானூறு   3. சிலப்பதிகாரம்   4. புறநானூறு

26. உயிரினங்கள் தோன்றி வாழ்ந்து மறைய மூலகாரணமான பொருள்
1. உயிர்கள் 2. மலங்கள் 3. கடவுள் 4. உலகம்

27. "சென்ற இடத்தாற் செலவிடாது தீது ஓரிஇ நன்றின் பால் உய்ப்பது அறிவு" எனும் திருக்குறள் வலியுறுத்தும் விடயம்
1. பொறுமை 2. அறிவுடமை 3. இன்சொல் 4. வாய்மை

28. சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரத்தையும் கடக்க எடுக்கும் காலப்பகுதி
1. வாரம் 2. திதி 3. யோகம் 4. கரணம்

29. ஆவணி மாதப் பூரணைக்கு முந்திய வெள்ளிக்கிழமையில் அனுட்டிக்கப்படும் விரதம்
1. சதுர்த்தி விரதம் 2. திருவாதிரை விரதம்
3. வரலட்சுமி விரதம் 4. கேதார கௌரி விரதம்

30. சைவமக்களின் பாவங்களை எரித்து நீறாக்குவதால் திருநீற்றிக்கு வழங்கப்படும் பெயர்
1. விபூதி 2. பஸ்மம் 3. பசிதம் 4. இரட்சை

31. அபரக் கிரியையில் அடங்காதது
1. அஸ்திசஞ்சயனம் 2. அந்தியேஷ்டி 3. திவசம் 4. உபநயனம்

32. இந்து சமயத்தின் முதல் நூல்கள்
1. வேதங்கள், ஆகமங்கள் 2. சைவசித்தாந்தம்
3. திருமுறைகள் 4. இதிகாச, புராணங்கள்

33. கந்த புராணத்தை தமிழில் பாடியவர்
1. சேக்கிழார் 2. சுந்தரர் 3. கச்சியப்பசிவாச்சாரியர் 4. ஸ்ரீநாத முனிவர்

34. "உம்பர் தரு தேனுமணிக் கசிவாகிக் ......" எனும் பாடல் இடம்பெறும் நூல்
1. சகலகலாவல்லிமாலை 2. கந்தலரங்காரம்
3. அபிராமிஅந்தாதி 4. திருப்புகள்

35. மனிதரிடம் அகந்தை மமதை இருக்க காரணம்
1. ஆணவம் 2. கன்மம் 3. மாயை 4. பதி

36. அகச்சந்தான குரவர்களின் பெயர்கள் மாத்திரம் அடங்கியுள்ள தொகுதி
1. சனகர், சனாதனர், சனற்குமாரர், மெய்கண்டதேவர்
2. திருநந்திதேவர், மெய்கண்டதேவர், சனகர், சனாதனர்
3. மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாவதிசிவாச்சாரியார்
4. திருநந்திதேவர், சனற்குமார முனிவர், சத்தியஞானதர்சினிகள், பரஞ்சோதிமுனிவர்

37. ஆண்மாக்களின் இறுதி இலட்சியம்
1. வீடுபேறு 2. இறைவனை வழிபடல்
3. இறைதொண்டு புரிதல் 4. கிரியைத் தொண்டு புரிதல்

**கீழ்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி 38, 39, 40 ஆம் வினாக்களுக்கு விடை தருக**

| குரவர்கள் | வாழ்வியல்சம்பவம் | நூல் |
|---|---|---|
| A மெய்கண்டதேவர் | D ஆகம நூல் அறிவு நிரம்பப்பெற்றவர் | G தேவாரம் |
| B திருநாவுக்கரச நாயனார் | E இறைவனது அருளினால் பிறந்தவர் | H சிவஞான சித்தியார் |
| C அருணந்தி சிவாசாரியார் | F சூலைநோயினால் வருந்தியவர் | I சிவஞானபோதம் |

38. சைவசித்தாந்த நூல்களுள் முதல் நூலாக விளங்குவதுடன் தொடர்புடைய தொகுதி
   1. ADF  2. AEI  3. CDG  4. BFG

39. சரியைத் தொண்டு செய்தவருடன் தொடர்புடைய தொகுதி
   1. AEI  2. BFG  3. CDH  4. ADI

40. "ஆணவத்தின் சொரூபம் யாது.... ? என்று வினா எழுப்பியவருடன் தொடர்புடைய தொகுதி
   1. CEG  2. ADG  3. BFH  4. CDH

## பகுதி - II

**01. முதலாம், இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. சமய தத்துவ நூல்கள் கடவுளின் உண்மைகளை நிரூபிப்பதற்கு கையாளும் அளவைகளைத் தருக.
2. நித்திய கருமங்களாக செய்ய வேண்டிய சமய செயற்பாடுகள் 04 தருக.
3. சைவசமயம் வலியுறுத்தும் முக்கிய விழுமியங்கள் 03 தருக.
4. பஞ்சாங்கத்தில் இடம்பெறும் இராசிகள் இரண்டினை எழுதுக.
5. ஆகமம் என்ற சொல்லின் பொருள் யாது?
6. சிவசின்னம் மூன்றினையும் தருக.
7. சுந்தர மூர்த்தி நாயநார் நின்ற நெறி, அடைந்த முத்தி என்பவற்றை எழுதுக.
8. தோத்திரப்பாடல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
9. பூர்விக இலங்கையில் சைவத்தை நிலைபெறச் செய்தவர்கள் யாவர்?
10. நித்திய அன்னதானம் இடம்பெறும் 02 ஆலயங்களைக் குறிப்பிடுக.

**02.** பின்வரும் திருமுறைப் பாடல்களில் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதி அவற்றின் பொழிப்புரையையும் தருக.
   1. உற்றுமை சேர்வது.....  2. மீளா அடிமை.....
   3. உம்பர் தரு தேனுமணிக் கசிவாகிக் .....  4. யாவர்க்குமாம் இறை....

**03.** "இறை சிந்னையுடன் வாழ்வியற் கருமங்களை ஆற்றுவோம்"
   1. நாம் வாழும் இடங்களில் எல்லாம் திருக்கோயில்களை அமைப்பதன் முதன் நோக்கம் யாது?
   2. நாம் தினமும் தெய்வ சிந்தனையுடன் ஆற்றும் கருமங்கள் 3 தருக
   3. கடவுள் நினைவோடு வாழ நம்மை நெறிப்படுத்தும் வழிமுறைகள் 05 தருக.

**04.**

"வம்மின்கள்! வம்மின்கள்! வானத்தீர் எல்லாரும்
நும்பை அயர்வித்த நொறில் பரித்தேர் வெம்சூரரை
அம்ம அவுணர் அனிகத்துடன் எம் கோ
இம்மெனவே வேலால் இது போழ்து எறிந்தனனே

1. இப்பாடல் இடம்பெறும் நூல் எது? அதன் ஆசிரியர் யார்?
2. இப்பாடலின் பொருளை சுருக்கமாகத் தருக?
3. கந்த புராணம் பற்றி சுருக்கமாக விளக்குக.

**05.**

1. சைவ வித்தியா விருத்திச் சங்கம் எந்த ஆண்டில் எவ்விடத்தில் ஆரம்பிக்கப்பட்து?
2. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நோக்கங்கள் 5 குறிப்பிடுக.
3. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சமய, சமூகப்பணிகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

**06.**

1. இந்து சமயத்தின் முதல் நூல்கள் எவை?
2. வேதங்களின் உட்பிரிவுகளைக் குறிப்பிடுக.
3. ஆகமங்கள் கூறும் விடயங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.

**07.**

1. பின்வருவனவற்றுள் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.
    1. விபுலானந்தர்
    2. பஞ்சாங்கம்
    3. கந்த சஷ்டி
    4. கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரம்